Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 23, 2022

திங்கட்கிழமை மே 23, 2022 | ஒளி: 08 கதிர்: 003 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## 50,000 டொலரை வைத்திருந்தவர் கைது



50,000 அமெரிக்க டொலரை வைத்திருந்த 36 வயதான நபரொருவர் வெலிக்கடை பிரதேசத்தில் வைத்து, விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2



### மே 9 வன்முறைச் சம்பவங்கள்:

## 1,500 பேர் கைது

மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், இதுவரை 1,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஆஸி செல்ல முயன்ற

## இலங்கையர்கள் இடைமறிப்பு

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட இலங்கையர்கள் சிலர், படகுடன் அவுஸ்திரேலிய பாதுகாப்பு பிரிவினரால் இடைமறிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கை மற்றும் பொதுவான நடவடிக்கைகளுக்கு அமையவே படகு இடைமறிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## இன்று வருகிறது 21 ஆவது திருத்தம்

அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்டமூலம், அமைச்சரவையில் இன்று (23) சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### சர்வக்கட்சி அரசாங்கத்தால்

# கையும் பிளக்கும் மொட்டும் உதிரும் அபாயம்

**அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கடும் மோதல் ஆரம்பம்**

**சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருசிலர், இன்று அமைச்சர்களாக பதவியேற்கக்கூடுமென தகவல்கள்**

மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டு சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வரசாங்கத்தின் அமைச்சரவை இன்னும் முழுமையாக நியமிக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2




## தமிழ்நாட்டின் நிவாரணம் கொழும்பை வந்தடைந்தது

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள், கொழும்பு துறைமுகத்தை நேற்று (22) வந்தடைந்ததுடன், அவை இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. 9,000 மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால்மா, 25 மெற்றிக் தொன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களும் நிவாரண பொருட்களில் அடங்குகின்றன.

தொடர்ச்சி P2



### தொடர்மாடிகளிலுள்ள குறைவருமான


## மக்களுக்கு சமைத்த உணவு வழங்குங்கள்

### பிரதமர் ரணிலிடம், மனோ எம்.பி கோரிக்கை

“கொழும்பு மாநகரத்திலுள்ள தொடர்மாடி குடியிருப்புகளில் வசிக்கும் பின்தங்கிய மக்களை, விசேட தேவை உள்ள பிரிவினராக அறிவித்து, பங்கீட்டு குடும்ப அட்டைகளை வழங்கி, அவர்களுக்கு முதற்கட்டமாக சமைத்த உணவு வழங்குங்கள்” என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அலரிமாளிகைக்கு ‘நோ’ சொன்ன ரணில்



பிரதமர் அலுவலகத்தின் செலவுகளை 50 சதவீதத்தால் குறைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்திருந்த நிலையில், அது தனக்கும் பொருந்தும் என்று தெரிவித்துள்ள பிரதமர், அலரிமாளிகையில் வசிப்பதில்லை என தீர்மானித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆஸி பாராளுமன்றத்துக்கு முதல் இலங்கை பெண்



அவுஸ்திரேலியாவின் 47ஆவது பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டாட்சித் தேர்தலில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கசாண்ட்ரா பெர்னாண்டோ வெற்றி பெற்றுள்ளார் என்பதுடன், அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முதல் இலங்கைப் பெண்மணி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

### பரீட்சை நிலையங்களுக்கு

## பிந்தி வராதீர்கள்; முந்தி வாருங்கள்

### பரீட்சைகள் திணைக்களம் வேண்டுகோள்



மகேஸ்வரி விஜயனந்தன்

இன்றையதினம் (23) ஆரம்பமாகவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள், கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் வழமையான நேரத்தை விட சில நிமிடங்களுக்கு முன்னதாகவே பரீட்சை நிலையங்களுக்கு வருகை தருமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## பரீட்சைகளுக்கு புலிகள் தடை ஏற்படுத்தவில்லை

மகேஸ்வரி விஜயனந்தன்

இன்று (23) ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் தோற்றுவதற்காகச் செல்லும் மாணவர்கள், பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிகள், கடமை நேர அதிகாரிகள் எவ்வித தடையுமின்றி பரீட்சை நிலையங்களுக்கு செல்வதற்கான சந்தர்ப்பங்களை பொதுமக்கள் வழங்க வேண்டும் என, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## ‘குரங்கு அம்மை’யை கண்டறிய இலங்கையில் வசதிகள் உள்ளன

உலகின் பல நாடுகளில் பரவியுள்ள ‘குரங்கு அம்மை’ தொற்று நோய் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள மற்றும் நோய்த் தொற்றை கண்டறிவதற்கான வசதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் உள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடனம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ‘குரங்கு அம்மை’ குறித்து WHO ஆலோசனை

### 14 நாடுகளில் தொற்றாளர்கள் உறுதி

உலக நாடுகளில் கொரோனா தொற்றின் ஆதிக்கம் கலக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற நிலையில், மேற்கத்தேய நாடுகளில் புதிதாக ‘மங்கி பொக்ஸ்’ என்று அழைக்கப்படுகிற ‘குரங்கு அம்மை’ பரவல் அதிர்வலைகளை ஏற்படுத்து வருகிறது. இது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) ஆலோசனை நடத்திவருகிறது.

தொடர்ச்சி P2

# 1,500 பேர் கைது

கொழும்பிலும் நாடு முழுவதிலும் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து, அனைத்து பொலிஸ் நிலையங்களும் குற்றப் புலனாய்வு திணைக்களம் உள்ளிட்ட பல விசேட பொலிஸ் பிரிவுகளும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (21) புதிதாக பதிவு செய்யப்பட்ட எட்டு முறைப்பாடுகளுடன், பொலிஸாருக்கு இதுவரை மொத்தம் 844 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் வன்முறை தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களில் 101 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலும் 39 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 677 பேர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த அவர், வன்முறை சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யவும், குற்றவாளிகளை கைது செய்யவும் பொலிஸ் தலைமையகம் அவ்வப்போது பணிப்புரைகளை விடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இலங்கையர்கள் இடைமறிப்பு

பாதுகாப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் (21) காலை குறித்த படகு இடைமறிக்கப்பட்டதாகவும் படகில் 15 இலங்கை பிரஜைகள் இருந்தததாகவும் அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளயிட்டுள்ளன.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்படும் புகலிடக் கோரிக்கையாளர்களை மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்புவதற்கு கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கொள்ளைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்து வரும் நிலையில், கிறிஸ்மஸ் தீவின் மேற்கு கடற்பிராந்தியத்திலேயே இவர்கள் இடைமறிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

# இன்று வருகிறது...

இதில் இரட்டை பிரஜாவுரிமையை கொண்டவர்கள், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாத வகையில் திருத்தம் மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தவிர, தற்போதுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு மேலதிகமாக தேசிய கணக்காய்வு ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்வனவு ஆணைக்குழு என்பன சுயாதீன ஆணைக்குழுக்களாக திருத்தப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை சுதந்திரமாகவும் பலப்படுத்தும் வகையிலும் 21ஆவது அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சபையினூடாகவே மத்திய வங்கியின் ஆளுநரை நியமிப்பதற்கும் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டின் நிவாரணம் கொழும்பை வந்தடைந்தது

கடந்த 18 ஆம் திகதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் குறித்த நிவாரணக் கப்பல் பச்சைக் கொடி அசைத்து அனுப்பி வைக்கப்பட்டது.

40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் மருந்துகள் உட்பட 5.5 பில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்களை இலங்கைக்கு வழங்க தமிழக அரசாங்கம் ஒப்புக்கொண்ட நிலையில், அதன் முதல் தொகுதி நேற்று (22), நாட்டை வந்தடைந்தது. இந்தப் பொருட்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் உள்ள ஆதரவற்ற மக்களுக்கு விநியோகிக்கப்படும் என கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய மக்களிடமிருந்து இலங்கை மக்களுக்காக அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லே கோபால், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இதன்போது, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பிரதமர் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# ஆஸி பாராளுமன்றத்துக்கு...

தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி மெல்போர்னில் உள்ள ஹோல்ட் தொகுதியில் போட்டியிட்ட அவர், அதே தொகுதியில் போட்டியிட்ட இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த மற்றொரு வேட்பாளரான ரஞ்ச் பெரேராவை தோற்கடித்து அவர் பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

அவரது மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கையில் கசாண்ட்ரா பெர்னாண்டோ முன்னிலை வகிக்கிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

1988 ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்த அவர், 1999 இல் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தார் அவர், பேஸ்ட்ரி சமையற்காரராகப் பணியாற்றியதுடன், ஆங்கிலம் பேச முடியாத புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கு ஆங்கிலம் கற்பித்து வந்துள்ளார்.

அத்தியாவசியத் தொழிலாளர்களுக்கான நியாயமான சம்பளம் மற்றும் நியாயமான வேலைகளுக்காகப் போராடிய அவர், சில்லறை மற்றும் துரித உணவுத் துறையில் உள்ள தொழிலாளர்களின் பிரதிநிதியாகவும் செயற்படுகிறார்.

# குரங்கு அம்மையை...

இதன்படி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடனம், உயிரணு தொடர்பான கற்கை ஆய்வு நிறுவகத்தில் அது தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் அடையாளம் காணப்பட்ட குரங்கு அம்மை தொற்று தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயும் பரவத்தொடங்கியுள்ளது.

இதனால் உலக சுகாதார அமைப்பு லண்டன் நகரில் அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# அபாயம்

அவ்வப்போது புதியவர்களும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவி வகித்தவர்களில் பலரும், சர்வகட்சி அரசாங்கத்திலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய அரசாங்கத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள், கடந்த அரசாங்கத்திலிருந்து விலகி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட்டவர்கள் என, பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கம் வகிக்கின்றனர். மற்ற கட்சிகள் மற்றும் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிமல் சிறிபால டி சில்வா, கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, நளின் பெர்னாண்டோ மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் ஏற்கனவே அமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

கட்சியை உடைத்து பிளவை ஏற்படுத்தி விடவேண்டாமென, முன்னாள் அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினயமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஆனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளிலிருந்து, அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

இந்நிலையில், புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கடும் மோதல் ஆரம்பமாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த குழுவினர், ஜனாதிபதி மற்றும் பிரதமரை அவ்வப்போது சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட சுமார் 25 உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், 23 அமைச்சர்களில் பதின்மூன்று பேர் ஏற்கெனவே பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் 5 பேர் ஏற்கெனவே பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், மைத்திரிபால சிறிசேனவை தலைமையாகக் கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருசிலர், இன்றையதினம் (23) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவியேற்கக்கூடுமென தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், சுதந்திரக் கட்சிக்குள் மீண்டுமொரு பிளவு ஏற்படுமென உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, அரசியலமைப்பில் 21 ஆவது திருத்தத்தை ஏற்படுத்தும் வகையிலான சட்டமூலம், நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால், இன்றைய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த திருத்தத்தில், இரண்டை பிரஜைவுரிமை கொண்டவர், இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது என்பதும் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. இது, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகையால், 21 ஆவது திருத்தத்தில் மேற்படி விவகாரத்துக்கு ஆதரவளிப்பது தொடர்பில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு இடையில் இருவேறுபட்ட கருத்துகள் நிலவுவதாக அறியமுடிகின்றது.

கையை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இன்னும் சிலர் அமைச்சர் பதவிகளை ஏற்பதற்கு தயாராகிவருவதனாலும், அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தில் குறிப்பட்ட இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரத்துக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தாமரை மொட்டை சிக்கமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் ஏற்பட்டிருக்கும் கருத்து முரண்பாட்டினாலும், இரு கட்சிகளுக்குள்ளும் பிளவுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகவே இருப்பதாக இருக்கட்சிகளின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிந்தி வராதீர்கள் முந்தி வாருங்கள்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டி.தர்மசேன, மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

5 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ள அதேவேளை 25,000க்கும் மேற்பட்ட அதிகாரிகள் பரீட்சை சார்ந்த கடமைகளில் ஈடுபடவுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

மாணவர்களை பரீட்சை மண்டபங்களுக்கு வருகைதர அவகாசம் வழங்குமாறு மேற்பார்வையாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பரீட்சை வினாத்தாள் விநியோகம் செய்யப்பட்ட பின்னர், 30 நிமிடங்களுக்குள் பரீட்சை மண்டபத்துக்கு பரீட்சார்த்திகள் நுழைவதற்கு சட்டம் அனுமதிக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், சிறப்பு சூழ்நிலைகள் காரணமாக, அந்த காலக்கெடுவை மீறினாலும் தாமதமாக வருகை தந்தால் மாணவர்களை மன்னிக்குமாறு மேற்பார்வையாளர்களு க்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பரீட்சைக்கு தாமதமாக வரும் எந்தவொரு பரீட்சார்த்தியையும் நிராகரிக்க வேண்டாம் என்றும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட காலத்தை விட 5 மாதங்கள் தாமதித்து இப்பரீட்சை நடைபெறுவதாக சுட்டிக்காட்டிய அவர், பல சவால்களுக்கு மத்தியில் இம்மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதாகவும் சவால்களை வெற்றிக்கொள்வதே மாணவர்களுக்கு தற்போது இருக்கும் இலக்கு என்றார்.

தற்போது முஸ்லிம் மாணவர்கள் முகத்தை முழுமையாக மறைத்து பரீட்சைக்கு தோற்றுவது தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளதாகத் தெரிவித்த அவர், முஸ்லிம் மாணவர்கள் சாதாரணமாக ஹிஜாப் அணிந்து பரீட்சைகளுக்கு தோற்ற முடியும் என்பதுடன், முழுவதமாக முகத்தை மறைத்து பரீட்சைக்கு தோற்றுவது தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இன்று ஆரம்பமாகி, ஜூன் 1ஆம் திகதியன்று நிறைவடையவுள்ள பரீட்சையில் தோற்றுவதற்கு 517,496 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதில், பாடசாலை விண்ணப்பதாரிகள் 407,129 பேரும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் 110,367 பேரும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

இம்முறை பரீட்சை நடத்துவத்றகு 3,844 பரீட்சை நிலையங்கள் மற்றும் 542 ஒருங்கிணைப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

# மக்களுக்கு சமைத்த உணவு வழங்குங்கள்

இது தொடர்பில் பிரதமருக்கு நேரடியாக கடிதம் அனுப்பியுள்ள மனோ எம்பி, ஊடகங்களிடம் மேலும் கூறியுள்ளதாவது,

“உணவு இல்லை. எரிவாயு இல்லை. மின்சாரம் இல்லை. இவற்றால் நாட்டிலேயே மிகவும் துன்புறுவது கொழும்பு தொடர்மாடி குடியிருப்புகளில் வாழும் மக்கள்தான். மாநகரத்தில் நாளாந்த வருமானம் பெற்று வந்த குடும்பங்கள், ஒருவேளை உணவுமின்றியும், உணவு சமைக்க வழியுன்றியும் தவிக்கிறார்கள்.

குறிப்பாக, வடகொழும்பின் பின்தங்கிய நகர தோட்ட குடியிருப்புகளில் வாழ்ந்த மக்கள், எமது ஆட்சிகாலத்தில் சுமார் 13,000 தொடர்மாடி இல்லங்களில் குடியமர்த்தப்பட்டார்கள்.

இந்த குடும்பங்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கும், கொழுப்பு நகரின் பின்தங்கிய குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கும், பங்கீட்டு அட்டைகள் வழங்கி, அவர்களுக்கு சமைத்த உணவு வழங்குங்கள்.

இதற்காக, கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள பாரிய சமையலறை மற்றும் கொழும்பு மாநகரசபைக்கு சொந்தமான பயன்படுத்தபடாத சமையலறைகள் ஆகியவை பயன்படுத்தலாம். இராணுவ சமையல் பணியாளர்களை பணியில் அமர்த்தி இயல்பு நிலைமை திரும்பும்வரை இந்த திட்டத்தை முன்னெடுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்

# 50,000 டொலர்களை வைத்திருந்தவர் கைது

பண சலவை சட்டத்தின் அடிப்படையில், பணமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், குறித்த நபர், சனிக்கிழமை (21) கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் கிருலப்பனை சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான உண்டியல் மற்றும் ஹவாலா பணப்பரிமாற்ற முறைகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பு, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் உண்டியல் முறையினூடாக 47,000 அமெரிக்க டொலர்களை பரிமாற்றம் செய்வதற்கு முயன்ற இரண்டு பேர் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால், சனிக்கிழமை (14) கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, பெபிலியான பிரதேசத்தில் உண்டியல் முறையினூடாக பரிமாற்றுவதற்காக 50,000 யூரோ நாணயங்களை வைத்திருந்த 53 வயதுடைய நபர் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை (16) கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அலரிமாளிகைக்கு ‘நோ’...

கொழும்பிலுள்ள தனது தனிப்பட்ட இல்லத்தில் தங்கியிருந்து பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி ஆட்சிக் காலத்தில் கூட அலரிமாளிகையில் தங்கியிருக்கவில்லை எனவும், உத்தியோகபூர்வ தேவைகளுக்காக மாத்திரம் அலரிமாளிகையை பயன்படுத்தியதாகவும் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பரீட்சைகளுக்கு புலிகள்...

2005- 2010ஆம் ஆண்டு வரை தான் கல்வி அமைச்சராக பதவி வகித்த போது நாட்டில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றதாகவும் இதன்போது வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பரீட்சைகள் அனைத்தும் தடையின்றி நடத்தப்பட்டன என்ற அவர், இதன்போது முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பினர் கூட எந்தவொரு பரீட்சையையும் நடத்துவதற்கு தடையை ஏற்படுத்தவில்லை என்பதையும் நினைவு கூர்ந்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்குறிப்பிட்ட வேண்டுகோளை விடுத்தார்.

எனவே மாணவர்களை வாகனங்களில் பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்பவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் முன்னரிமை அளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இன்று இருக்கும் முக்கிய பிரச்சினையான எரிபொருள் பிரச்சினைக்கு மத்தியில் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதில் பாரிய சவால்கள் ஏற்பட்டுள்ளன. இதனை தீர்ப்பதற்காக நேற்று முன்தினம் (21) முழு நாளும் 9 ஆளுநர்களையும் தொலைபேசி மூலம் தொடர்கொண்டு கலந்துரையாடி, அவர்கள் ஊடாக கல்வித் துறையினரின் எரிபொருள் தேவையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதற்கமைய, மாணவர்களின் பரீட்சை அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை, அதிகாரிகளின் பரீட்சை நேர கடமைக்கான கடிதங்களை வைத்திருப்பவர்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் முன்னுரிமையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# குரங்கு அம்மை குறித்து WHO ஆலோசனை

“37 பேருக்கு குரங்கு அம்மை உறுதியாகி உள்ளது. 71 பேருக்கு இந்த நோயின் அறிகுறிகள் கண்டறியப்பட்டு, விசாரணை நடத்தப்படுகிறது” என, உலக சுகாதார ஸ்தாபனத்தின் செய்தி தொடர்பாளர் டாரிக் ஜசரேவிக் தெரிவித்தார்.

“இதுவரையில் பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின், சுவீடன், ஐக்கிய இராச்சியம் ஆகிய 8 நாடுகளில் சமீப காலத்தில் குரங்கு அம்மை பரவி உள்ளது. இந்த நாடுகளைத் தவிர்த்து அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்காவில் உள்ளூர் தொற்றாக குரங்கு வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது” என, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிராந்திய பணிப்பாளர் குளூஜ் சுட்டிக்காட்டினார்.

இதற்கு மேலதிகமாக இஸ்ரேல் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளிலும் தொற்று இனங்காணப்பட்டுள்ளதுடன், தொற்றாளர்களைக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

ஆப்பிரிக்க நாடான கொங்கோவில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,284 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் மேலும் 11 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதுடன், இதனால் அங்கு இதன் பாதிப்புக்குள்ளானோர் மொத்த எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

குரங்கு அம்மையைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சையின்றி சில வாரங்களில் நோயிலிருந்து மீண்டு விடலாம் என்றாலும், வளரும் குழந்தைகள், கர்ப்பிணிகள், நோய் எதிர்ப்புசக்தி குறைபாடு உடையவர்கள் போன்றோருக்கு இந்த நோய் தாக்குதல் தீவிரமாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

காய்ச்சல், கணுக்களில் வீக்கம், கொப்புளங்கள் போன்றவை இந்த குரங்கு அம்மையின் அறிகுறிகளாக இருக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது.

எளிதாக இந்த நோய் பரவிவிடாது என்றாலும் நெருங்கிய உடல் தொடர்புகள், பாலுறவு போன்றவற்றினால் பரவும் எனவும் மனிதர்களுக்கு இந்த வைரஸ் கண்கள், மூக்கு, வாய், உடல் திரவங்கள், சுவாச நீர்த்துளிகள் வாயிலாக பரவும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சுவீடனில் இந்த தொற்று பாதிப்பு முதன்முதலாக கண்டறியப்பட்டு, அங்கு இந்த நோய் ஆபத்தான நோயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொற்று பரவலை அங்கு தடுப்பதற்கு கட்டுப்பாடு நடவடிக்கைகளை முடுக்கி விடுவதற்கு வழிவகுக்கும் என்று அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் லேனா ஹாலன்கிரென் தெரிவித்தார்.






# எரிவாயுக்கு திடீரென ஒன்று கூடியதால் பதற்றம்

■ ஹொசேரியன் லெம்பட்

மன்னாரில் எரிவாயு விநியோகிக்கப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து, மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியிலுள்ள லிட்ரோ எரிவாயு முகவர் நிலையத்துக்கு முன்பாக பொது மக்கள் ஒன்று கூடியதால், அப்பகுதியில் போக்குவரத்து திடீரென தடைப்பட்டது. அத்துடன் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

ஒரு தொகுதி எரிவாயு சிலிண்டர்கள் மன்னார் லிட்ரோ எரிவாயு முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக நேற்று (22) தகவல் கசிந்துள்ளது. கேள்வியுற்ற மக்கள், வெற்று சிலிண்டர்களுடன், முகவர் நிலையத்தின் இருபுறங்களில் வரிசையாக நின்றனர்.

எனினும், சமையல் எரிவாயு விநியோகிக்கப்படவில்லை. இதனால், வரிசையில் நின்றிருந்த மக்கள், ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டுக்கொண்டனர். வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது. அதனையடுத்து பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

விடயத்தை கேள்வியுற்று ஸ்தலத்துக்கு விரைந்த மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப், பொது மக்களிடமும் முகவர்களிடமும் கலந்துரையாடினார்.

போதுமான எண்ணிக்கைக்குக் குறைவாக, எரிவாயு சிலிண்டர்கள் முகவர்களுக்கு கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதை விநியோகிக்க வேண்டாம் என முகவர்களுக்கு அறிவுறுத்திய பிரதேச செயலாளர், உரிய தரப்பு மற்றும் உயர் அதிகாரிகளுடன் நாளை (இன்று 23) கலந்துரையாடி பொது தீர்மானத்தின் அடிப்படையில் விநியோக நடவடிக்கையை முன்னெடுக்குமாறு முகவர்களுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன், வதந்திகளை நம்பிவந்து, நேரத்தை வீணடிப்பதுடன், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி, வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு, வீணான பதற்றத்தை தோற்றுவிக்கவேண்டாமென அங்கிருந்த பொது மக்களிடம் கேட்டுக்கொண்டார்.



## யாழ்ப்பாண சிறைச்சாலையில் 'காத்திருப்போர் மண்டபம்' திறந்து வைப்பு

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ள தமது உறவுகளை பார்வையிட வரும் மக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், 'காத்திருப்போர் மண்டபம்' யாழ்ப்பாண சிறைச்சாலை வளாகத்தில் நேற்று (22) திறந்துவைக்கப்பட்டது.

யாழ். சிறைச்சாலையில் உள்ள தமது உறவினர்களை பார்வையிட வரும் உறவுகள், வெயிலில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

எனினும், காத்திருப்போர் மண்டபமொன்றை அமைத்து தருமாறு யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகரால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி முயற்சியால் அறக்கட்டளை நிதியம் ஒன்றின் நிதிப் பங்களிப்பில் காத்திருப்போர் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு, திறந்துவைக்கப்பட்டது.

'சிறைக் கைதிகளும் மனிதர்களே' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமாதானத்தை வலியுறுத்தி சமாதானப் புறாவும் பறக்கவிடப்பட்டது.

இந் நிகழ்வில், எஸ். கே நாதன் அறக்கட்டளை நிதியத்தின் இயக்குநர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன், யாழ்ப்பாண சிறைச்சாலையின் அத்தியட்சகர் வி ஏ உதயகுமார, யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் ஏச். எம். ஹேரத், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ரணிலின் உயிர் பசிலிடம் ஊசலாடுகிறது

■ மஹேஸ் கீர்த்திரத்ன

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குப் செல்ல வேண்டுமென மக்கள் போராடுகிறார்கள். அதுபோல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் வீட்டுக்கு அனுப்பியிருந்தனர் எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, மக்களால் நிராகரிக்கப்பட்ட இருவரே நாட்டை ஆட்சி செய்வதாகவும் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மாத்தளை மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண, சாமர சம்பத் தஸநாயக்க ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவை அமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொள்ள உள்ளனர்.

ரணிலின் உயிர் பசிலிடமே



இருக்கிறது. நாட்டைப் பாதுகாப்பதற்கு பதிலாக ரணில் ராஜபக்ஷர்களை பாதுகாக்கிறார். ஜனாதிபதி, பிரதமர் பழைய அரசியலையே செய்கிறார்கள். அவர்களால் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய முடியாது.

40 ரூபாய் வருமானத்தைப் பெற 100 ரூபாயை செலவிடும் நிலைக்கு நாடு சரிந்துள்ளது. 380 ரூபாயாக இருந்த 400 கிராம் பால்மா தற்போது 1,020 ரூபாயாக அதிகரித்துள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையியே இந்த அரசாங்கம் உள்ளது என்றார்.

## சங்கிலி மன்னனின் சிரார்த்த தினம்

■ வி.நிதர்ஷன்



தமிழ்த் தேசிய சைவ மன்னன் 02ஆவது சங்கிலி மன்னனின் 403ஆவது சிரார்த்த தின நினைவேந்தல் அஞ்சலிகள், யாழ். நல்லூர் சங்கலியின் கோட்டையின் முன்பாக உள்ள நினைவிடத்தில் நேற்று (22) நடைபெற்றன.

இலங்கை சிவசேனை அமையத்தின் எற்பாட்டில், 'இந்துவாக வாழ்வோம் - இந்து சமயம் காப்போம்' என்னும் கருப்பொருளில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், சங்கிலியன் மன்னனின் உருவச் சிலைக்கான மலர்மாலையை அணிவித்தார்.

இதனை தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மற்றும் மரபுஉரிமைகள் பீட பீடாதிபதி கலாநிதி புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியரும் ஆகிய கலாநிதி பாலசுந்தரம் பிள்ளை, யாழ். மாநகர பிரதி மேயர் துரைராஜா ஈசன், யாழ். மாநகர சபையின் செயலாளர் வ.ஜெயசீலன், மதகுருமார்கள், கல்வியாளர்கள், சமூக ஆய்வாளர்கள் கலந்துகொண்டு நினைவேந்தல் செலுத்தினர்.



## 'டீல்' இல்லாது அரசியல் செய்ய முடியாது

'டீல்' செய்ய முடியாத ஒருவரால் அரசியல் செய்ய முடியாதெனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, 'டீல்' இல்லை என்றால் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியாதெனவும் தெரிவித்தார்.

காலி மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசியலமைப்புக்கு முன்பாக தேசிய கொள்கை ஒன்றை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். 19, 20, 21ஆவது திருத்தச் சட்டங்கள் என எதைக் கொண்டுவந்தாலும் அதைக் கொண்டு எரிபொருளையோ, காஸையோ, அத்தியாவசிய



பொருட்கள், மருந்து பொருட்களையோ பெற்றுக்கொள்ள முடியாது. மேற்குறித்த திருத்தச் சட்டங்கள் எல்லாம் அரசியல் நோக்கங்களுக்கானவையே. ஒவ்வோர் அரசியல் தலைவர்களின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கே இவை தேவை. சிலர் என்னைப் பார்த்து, 'வஜிர ஒரு 'டீல்' காரர் என்கிறார்கள். 'டீல்' இல்லாது எதனையும் செய்ய முடியாது. பொருளாதாரத்தைக்கூட கட்டியெழுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

## சஜித் அணியின் மற்றோர் எம்.பிக்கும் ரணில் அழைப்பு



சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ள தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, நாட்டுக்குப் பணியாற்றுவதற்கான வாய்ப்பாக இதனைத் தான் பயன்படுத்தப்போவதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகுவதற்கு தான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கான அழைப்பு எனக்கும் விடுக்கப்பட்டுள்ளது. வாய்ப்புக் கிடைத்தால் நாட்டுக்குப் பணியாற்ற தயாராக இருக்கிறேன். எவ்வாறாயினும் கட்சியிலிருந்து விலகுவதற்கு தயார் இல்லை என்றார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகள் அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்ய நிதி உதவியளித்திருப்பது நல்ல விடயம். புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறப்பாகச் செயற்படுகிறார் எனவும் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள் விபத்து:

## வீதியில் இழுத்து செல்லப்பட்ட சிறுவன்

■ ஹொசேரியன் லெம்பட்

மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியில் இன்று (22) காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த 07 வயதுச் சிறுவன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சிறுவன், அவருடைய தாய் உள்ளடங்கலாக மூவர் நேற்று காலை மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியூடாக நடந்து சென்ற நிலையில், குறித்த வீதியூடாக அதிக வேகத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர், சிறுவனை மோதியதோடு, சிறிது தூரம் மோட்டார் சைக்கிளில் சிறுவன் இழுத்துச் செல்லப்பட்டார்.

உடனடியாக அப்பகுதியில் சென்றவர்களால் சிறுவன் மீட்கப்பட்டு, மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்தை ஏற்படுத்திய இளைஞன், அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில், தற்போது மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று வருவதாக தெரிய வருகின்றது.

எனினும், இந்த விபத்து தொடர்பாகவும், விபத்தை ஏற்படுத்தியவருக்கு எதிராகவும் பொலிஸார் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## இனப்படுகொலை பிரேரணைக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பு

மே 18ஆம் திகதி, கனேடிய பாராளுமன்றத்தில் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்வதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற இலங்கைக்கான கனடாவின் பதில் உயர்ஸ்தானிகர் அமண்டா ஸ்ட்ரோஹானுடனான சந்திப்பில், பிரேரணையின் அப்பட்டமான பொய்யான உள்ளடக்கத்தை திட்டவட்டமாக நிராகரித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், 'இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றதாகக் கண்டறியப்படவில்லை' என்ற கனடா அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு அதன் தவறான பொருள் அடிப்படையில் முரண்படுவதாகக் தெரிவித்தார்.

இதுபோன்ற தொழில்நுட்பச் சொற்கள் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பிரேரணையின் தவறான மற்றும் பாரபட்சமான தன்மை மற்றும் இத்தகைய நடத்தையின் விளைவாக பொது களத்தில் உருவாகியுள்ள இலங்கை மீதான எதிர்மறையான கருத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பிரேரணையில் உள்ள தவறுகளை சரிசெய்வதற்கு உரிய



நடவடிக்கை எடுக்குமாறு கனேடிய அரசாங்கத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து வரும் வலுவான இருதரப்பு உறவுகளின் பின்னணியில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

## பயன்படுத்தப்படாத இடங்களில் விவசாயம்



நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள பயன்படுத்தப்படாத அனைத்து இடங்களையும் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டுமென அதிகாரிகளுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டில் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் உணவுப் பஞ்சத்துக்கான பரிகாரமாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கும் அவர், எந்தவொரு நிறுவனங்களுக்குக் கீழும் பயன்பாட்டில் இல்லாத வெற்றிடங்கள் இருக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

முதலீட்டுக்காக வழங்கப்பட்ட இடங்கள் இதுவரையில் பயன்படுத்தவில்லை என்றால் அவற்றை உடனடியாக மீளப் பெற்று, புதிய முதலீடுகளுக்காக அந்த இடங்களை வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளதோடு, முதலீடுகளுக்கு இடங்களை வழங்குவது தொடர்பில் தேசிய, சர்வதேச ரீதியில் விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

நாடு வழமைக்கு திரும்பும் வரையில் திட்டமிடப்பட்ட அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் எனவும், அடுத்த வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரையில் அத்தியாவசிய விடயங்களுக்கு மாத்திரம் அமைச்சின் நிதியைப் பயன்படுத்த வேண்டும் எனவும் அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சமையல் எரிவாயு கொள்வனவில்

# மக்களின் பணம் சுரண்டல்

■ நூருல் ஹுதா உமர்

நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, அவற்றைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் கடுமையான நெருக்கடிகளை அனுபவித்து வருகின்றனர்.

அதனடிப்படையில், சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் நேற்று (22) காலை முதல் சமையல் எரிவாயு, லிற்றோ கேஸ் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டது. வெயிலையும் கவனத்தில்கொள்ளாது நீண்டவரிசையில் நின்று மக்கள் எரிவாயுவை பெற்றனர்.

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு 4,970 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் மக்களிடமிருந்து 5,000 ரூபாய் அறிவிடப்பட்டது. இது தொடர்பில் கேள்வியெழுப்பிய போது, மிகுதி கொடுக்க எங்களிடம் சில்லறை இல்லையென பிராந்திய விற்பனை முகவர் தெரிவித்தார்.

இதனால் பலத்த சலசலப்பு உருவாகியது. மக்களிடம் இருந்து ஒருவருக்கு தலா 30 ரூபாய் வீதம் பகல் கொள்ளையடிக்கப்படும் இந்தப் பணத்தால், மொத்தமாக பாரிய தொகை இறுதியில் சேரும் என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.



“ஏற்கெனவே, விலை அதிகரித்திருப்பதை தாங்கமுடியாமல் திணறும் நாங்கள், இப்போது வெயிலில் காத்திருந்து, பகல் கொள்ளைக்கு ஆளாக வேண்டி உள்ளது” என்று அங்கலாய்த்தனர். இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபைக்கு, பொதுமக்களால் தொலைபேசியூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரியகுளத்தில்

# அரசியல் வேண்டாம்

■ எம்.றொசாந்த் வி.நிதர்ஷன்

ஆரியகுளத்தை வைத்து குறுகிய அரசியலை நடத்த வேண்டாம் என யாழ். மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “ஆரியகுளம் தற்சமயம் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் காலத்தில் மிகச் சிறப்பாகவும் தூய்மையாகவும் அதனைப் பேண வேண்டுமென அவரிடம் கூறியிருக்கின்றோம்.

“அதேபோன்று மாநகர



சபையின் அனுமதியுடன் ஆரியகுளத்தில் படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. நாங்கள் பல நிபந்தனைகளை அவர்களுக்கு விதித்திருக்கின்றோம். படகு சேவைக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதிகள் செய்யப்பட வேண்டும். நீச்சல் பயிற்சி பெற்ற இரண்டு ஊழியர்கள் தொடர்ச்சியாக கடமையாற்ற வேண்டும். பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு இணங்கவே அனுமதி வழங்கப்பட்டது.

“மேலும், ஆரியகுளத்தை மாநகர சபையிடமிருந்து பறிக்கவெடுக்கும் முயற்சி என்பது, யாழ்ப்பாணத்தில் அமைதியின்மையை உருவாக்கி, மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயமாகும்.

“பொறுப்பில் இருக்கின்றவர்கள் ஆரிய குளத்தில் அரசியல் செய்வதை நாம் விரும்பவில்லை. அது ஒரு சாதாரண பொழுதுபோக்கு மையம். மக்களுக்காக கட்டப்பட்டதை, மக்களிடம் விட்டுவிடுங்கள். அதை வைத்து குறுகிய அரசியலை நடத்த வேண்டாம்” என்றார்.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



மட்டக்களப்பு, கல்லடியைச் சேர்ந்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரும், ஊடகவியலாளருமான உதயகுமார் உதயகாந்த், மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவானாக, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ. பீற்றர் போல் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், கல்லடி - உப்போடை விவேகானந்தா கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கொழும்பு, மாதம்பிட்டி புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரக் கல்வியையும் கல்லடி, முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தில் உயர்தரக் கல்வியையும் கற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. துஷாரா

## சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்கிறார்



■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தராகவும், மட்டக்களப்பு சனசமூக மத்தியஸ்த சபையின் பிரதி தவிசாளராகவும் கடமையாற்றும் வீரச்சந்திரன் குகதாஸன், உலக நீதிக்கான அமைப்பின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இம்மாநாடு, மே 29ஆம் திகதி தொடக்கம் ஜுன் 03ஆம் திகதி வரை நெதர்லாந்தில் உள்ள திஹேக் நகரில் நடைபெறவுள்ளது. 116 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்படி, வீ.குகதாஸன், நெதர்லாந்து பயணமாகவுள்ளார். சனசமூக மத்தியஸ்த சபையின் வினைத்திறன் சார் அனுபவப் பகிர்வையும் அதனை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் தொடர்பாக அவர் உரையாற்றவுள்ளார்.

இவர், கிழக்கு பல்கலைக்கழக சமூகவியல் சிறப்பு பட்டதாரியும், சிறுவர் பாதுகாப்பு, உளவளத்துணை, ஆங்கிலம், கணினி ஆகிய துறைகளில் டிப்ளோமா கற்கை நெறிகளையும், தொழில்வாண்மைசார் பயிற்சிகளையும் பெற்றவராவர். அத்துடன், சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சின் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் அபிருத்திப் பரப்பில் சிரேஷ்ட முதுநிலை வளவாளரும் ஆவார்.

ஏறாவூர் வன்முறை;

## 15 பேருக்கு விளக்கமறியல்

### சிறுவனுக்கு பரீட்சை எழுத அனுமதி

■ கனகராசா சரவணன்

ஏறாவூரின் மே 9ஆம் திகதி இரவு இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 16 வயது சிறுவன் உட்பட 15 பேரை, எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

மேற்படி 15 பேரும், ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு, அவரது உறவினரின் வீடு, ஹோட்டல், கடை தீவைப்பு மற்றும் 3 ஆடைத்தொழிற்சாலைளை சேதப்படுத்தியமை தொடர்பாக, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் (21) கைது செய்யப்பட்டனர்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசணைக்கமைய, மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்த விசாரணையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில், ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன், இன்று (23) க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

சிறுவனை, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் க.பொ.தர சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் சென்று பரீட்சை எழுத அனுமதிக்குமாறு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக, ஹோட்டலில் கொள்ளையிடப்பட்ட பொருட்களுடன் 14 பேரை, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜயர்படுத்தப்பட்டபோது, அவர்களையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அஹிம்சை வழி

## நடைபவனி தொடர்கிறது

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

வன்முறையற்ற அஹிம்சை ரீதியான சமூகத்தை உருவாக்க பிரார்த்தித்து, மட்டக்களப்பில் 10ஆவது நாளாகவும் பிரார்த்தனை நடைபவனி நடைபெற்று வருகின்றது.

சகல சமூக நண்பர்களாக ஒன்றிணைந்து, இந்த நடை பவனி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு, புளியடிக்குடா செபஸ்தியார் தேவாலயத்துக்கு அருகில் இருந்து ஆரம்பித்த இந்தப் பிரார்த்தனை நடைபவனி, மட்டக்களப்பு நகர மத்தியில் உள்ள காந்தி பூங்காவை நேற்று முன்தினம் (21) சென்றடைந்தது.

பிரார்த்தனை நடை பவனியில் கலந்து கொண்டவர்கள், தமது ஆடைகளில் காட்சிப்படுத்தியிருந்த பல்வேறு அம்ச வேண்டுகோள்கள் அடங்கிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளை, காந்தி சிலை அமைந்துள்ள வளாகத்தில் காட்சிப்படுத்தியதுடன், சுடரேற்றி சில நிமிடங்கள் அமைதியான முறையில் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பிரார்த்தனை நடைபவனி தொடர்ச்சியாக இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.









## கடற்கரையோரம் தூய்மையாக்கல்

மன்னார், தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா வரையிலான கடற்கரை கரையோர பகுதி தூய்மையாக்கும் நடவடிக்கை, மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அந்த அமைப்பின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் நேற்று (22) காலை நடைபெற்றது.
இதன்போது மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் கலந்துகொண்டு சிரமதானத்தை முன்னெடுத்தனர்.

(படங்கள்: லெம்பர்ட்)

ஆசிரியர் தாக்கியதில்

## மாணவனின் செவிப்பறை பாதிப்பு

■ எம்.றொசாந்த்

ஆசிரியர் அறைந்ததால் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவனின் செவிப்பறை பாதிப்படைந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழில் உள்ள பிரபல பாடசாலை ஆசிரியரே, செவ்வாய்க்கிழமை (17) இவ்வாறு செயற்பட்டுள்ளார்.

மாணவன் வைத்திய பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்ட நிலையில், அவரது செவிப்பறை சவ்வு பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பொலிஸ் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையும் ஓர் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாணவன் டெங்குக்கு பலி

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன், டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு பகுதியைச் சேர்ந்த கருணாகரன் ஆரோன் (வயது 11 ) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாணவன், காய்ச்சல் காரணமாக புதன்கிழமை (18) வலிநிவாரணி குளிசையை உட்கொண்டிருந்த நிலையில், 19ஆம் திகதி வயிற்றோட்டம், வாந்தி ஏற்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி வெள்ளிக்கிழமை (20) உயிரிழந்துள்ளார்.

யாழில் பெற்றோலுக்கு

## தொடர்ந்தும் நீண்ட வரிசை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெறுவதற்காக நேற்றும் (22) மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி உட்பட யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் காத்திருந்தனர்.

பரீட்சை கடமையில் ஈடுபடுவோர், வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டன. இதனால் பல இடங்களிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருட்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கினாலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காலை நேரத்தில் மூடப்பட்டே காணப்பட்டன.



## தொட்டிலடி வாள்வெட்டு; ஐவர் சிக்கினர்

■ எம்.றொசாந்த்

வன்முறைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த 5 பேர், யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்று முன்தினம் (21) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி மாலை 6.30 மணியளவில், , தொட்டிலடிச் சந்தியில் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

மூன்று திருட்டு மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்தி, 6 பேர் இந்த வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரான்லி வீதி

## விற்பனை நிலையத்தில் தீ

■ வி.நிதர்ஷன், எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்று, நேற்று (22) அதிகாலை முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

அதிகாலை 2.30 மணிளவில் விற்பனை நிலையத்தில் திடீரென ஏற்பட்ட தீ, கடை முழுவதும் பரவி முழுமையான சேதத்தை ஏற்படுத்தியது. கடையில் தங்கியிருந்த ஒருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன், அந்நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தீப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக யாழ். மாநகர சபையின் தீயணைப்பு படை முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

இந்த விற்பனை நிலையம் தீப்பற்றி எரிந்தமை தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



### தனியார் வகுப்புக்குச் சென்ற

## மாணவனை காணவில்லை

ரா.கமல்



எட்டியாந்தோட்டை, புனித மரியாள் தேசிய கல்லூரியில் தரம் 11இல் கல்வி பயிலும் புஷ்பராஜ் கிஷோத்திரன் எனும் மாணவன் நேற்று முன்தினம் (21 ) முதல் காணாமல் போயுள்ளார்.

தனியார் வகுப்புக்கு செல்வதாகக் கூறிச் சென்ற இம்மாணவன், இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோர் தெரிவித்தனர்.

எட்டியாந்தோட்டை, மீபிட்டிகந்த தோட்டத்தைச் சேர்ந்த இம் மாணவனைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் 0776146216, 0783761663, 0714148152 ஆகிய அலைப்பேசி இலக்கத்துக்கு தகவல் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

### மாத்தளையில்

## ஏழு நாள்களுக்கு கொரோனா தடுப்பூசி

மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா தடுப்பூசி செயற்றிட்டத்தின் கீழ், மாத்தளை மாநகர சபையின் சுகாதார பிரிவால் கொரோனா தடுப்பூசி நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய, இன்று (23) தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என மாத்தளை நகர பிரதி மேயர் அமில நிரோசன இந்ரத்ன தெரிவித்தார்.

மாத்தளை, சென். தோமஸ் பாடசாலை, பொரொன் நிலையம் என்பவற்றில் தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

இதன்கீழ் 12 வயது தொடக்கம் 15 வயதுக்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பைசர் இரண்டாவது தடுப்பூசியும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான நான்காவது தடுப்பூசியும் செலுத்தப்படவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.





### கெசல்கமுவவை அகலப்படுத்துவது ஏன்?

# மக்களுக்கு சந்தேகம்

### சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வுக்காக அகலப்படுத்துவதாக தகவல்

எஸ். சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ

தேசிய மின் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் பிரதான நீர்த்தேக்கமான காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீரை விநியோகிக்கும் கெசல்கமுவ ஓயாவின் இரு புறங்களையும் அகலப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க நோர்வூட் பிரதேச சபை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அனுமதியைக் கோரியுள்ளது.

எனினும், பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டின்சின் நகரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தெரேசியா தோட்டம் வரை குறித்த கெசல்கமுவ ஓயாவை விரிவுப்படுத்தும் போர்வையில், பிரதேச சபை இரத்தினக் கல் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கெசல்கமுவ ஓயா, ஊடறுத்துச் செல்லும் டின்சின் தோட்டத்திலிருந்து தெரேசியா தோட்டம் வரையான பல பகுதிகளில் தேசிய இரத்தினக்கல் அதிகார சபையால் 2000ஆம் ஆண்டு, இரத்தினக்கல் அகழ்வதற்கு சட்டரீதியாக அனுமதி வழங்கப்பட்டது.

இதன் காரணமாக இரத்தினக்கல் அகழ்பவர்கள் பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டதால் அங்கு பாரிய சுற்றாடல் அழிவு ஏற்பட்டதுடன், காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அதிகமான சேற்று மண் அரித்துச் செல்லப்பட்டது.

இந்த நிலையில், நோர்வூட் பிரதேச சபையால் கெசல்கமுவ ஓயா மழைக் காலங்களில் பெருக்கெடுத்துச் செல்வதாகத் தெரிவித்து, அதனைத் தடுப்பதற்காக டின்சினிலிருந்து தெரேசியா வரை கெசல்கமவ ஓயாவின் இரு கரைகளிலும் 6 அடியும் ஆற்றை 12 அடி ஆழமாக்கவும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் மாவட்டச் செயலாளரிடம் கடிதம் மூலம் மீண்டும் கோரப்பட்டுள்ளது.

எனினும், குறித்த பகுதியில் மாணிக்கக் கல் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளமையால், அது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு, நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபொடவால் தேசிய இரத்தினக்கல் அதிகார சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோனிடம் வினவியபோது, குறித்த பகுதியில் 'பெகோ', 'ஸ்கெவட்டர்' இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆற்றை அகலப்படுத்த அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் பரிந்துரைகளைப் பெற்று அகலப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு, நோர்வூட் பிரதேச சபை தவிசாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், கெசல்கமுவ ஓயாவை அகலப்படுத்துவதைத் தவிர, இரத்தினக்கல் அகழ்வது தனது நோக்கம் இல்லை என்றும் தாம் அகலப்படுத்த எண்ணியுள்ள பகுதிகளில் இரத்தினக்கற்கள் இருக்கின்றமை தொடர்பில் தனக்கு எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என நோர்வூட் பிரதேச சபைத் தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்துள்ளார்.



### சமையல் எரிவாயு விநியோகத்தில் மோசடி:

## லொறியின் திறப்பை கைப்பற்றிய நுகர்வோர்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பிரதேசத்துக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றி வந்த லிட்ரோ நிறுவனத்துக்குரிய லொறியின் திறப்பை, நுகர்வோர் சிலர் அபகரித்துச் சென்ற சம்பவம், ஹட்டனில் நேற்றுமுன்தினம் (21) இடம்பெற்றுள்ளது.

எனினும், பின்னர் ஹட்டன் பொலிஸார் தலையிட்டு, திறப்பை சாரதியிடம் பெற்றுக்கொடுத்தனர்.

நேற்று முன்தினம் 150 சிலிண்டர்களுடன் ஹட்டன் நகருக்கு லொறியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இதில் 140 சிலிண்டர்கள் முகவர் நிலையம் ஒன்றில் இறக்கப்பட்டு, மிகுதியாக இருந்த 10 சிலிண்டர்கள் ஹட்டன்-மல்லியப்பு சந்தியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு வழங்க லொறியின் சாரதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது, குறித்த ஹோட்டலுக்கு அருகில் இருந்த சிலர், இந்த விடயம் தொடர்பில் லொறியின் சாரதியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன்,லொறியின் திறப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் லொறியின் சாரதியால் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸார் தலையிட்டு, லொறியின் திறப்பை சாரதியிடம் பெற்றுக்கொடுத்தனர்.





## ஒற்றுமைக்கான சிரமதானம்




இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை பலப்படுத்தும் நோக்கில், பதுளை சர்வமத ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பசறை நகரில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.
(படங்கள்: சுரேஸ்குமார்)

### கொள்ளையிட்ட

## தங்க நகைகளை விழுங்கியவர் கைது



பாலித ஆரியவன்ஸ

தங்க நகைகளை கொள்ளையிட்டு, அதனை விழுங்கிய சந்தேகநபர், கைதுசெய்யப்பட்டுள்ளார் என, பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், அண்மையில் பதுளை ரஜமஹா விகாரைக்கு வந்திருந்த 16 வயது சிறுவன் அணிந்திருந்த 4 இலட்சம் ரூபாய் கைச்சங்கிலியை திருடிச் சென்றிருந்த நிலையிலேயே, கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, வினிதகம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, குறித்த கைச்சங்கிலியை திருடி விழுங்கியுள்ளதாகவும் அது தற்போது தனது வயிற்றில் இருப்பதாகவும் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய சந்தேகநபர், பதுளை பொது வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு, அவரது வயிறு 'எக்ஸ்ரே' பரிசோதனை செய்யப்பட்டது.

இதன்போது வயிற்றுக்குள் தங்க கைச்சங்கிலி இருப்பது உறுதியானதுடன், வயிற்றிலிருந்த சங்கிலியும் வைத்தியர்களால் வெளியே எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேகநபர் இதற்கு முன்னரும் பல தடவைகள் நகைகளை கொள்ளையிட்டு விழுங்கியுள்ளமை தெரியவந்துள்ளதுடன், தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

### திடீர் மரண விசாரணை அதிகாரியாக

## செபஸ்டியன் சகாயம் நியமனம்

ஆ. புவியரசன்



ஸ்பிரிங்வெலி, கோட்டகொடை, 7ஆம் பிரிவை வசிப்பிடமாகக் கொண்ட செபஸ்டியன் சகாயம், திடீர் மரண விசாரணை அதிகாரியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பதுளை நீதவான் நீதிமன்றத்தின் நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதவான் டப்ளியூ.என்.டி. சில்வா முன்னிலையில், ரில்பொல கோரல (பிரிவு) உட்பட 14 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குப் பொறுப்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

### தொழிலாளர்களின் பிரச்சினைகளை

## ஐ.நாவில் முறையிட நடவடிக்கை

மலைவாஞ்ஞன்




தெற்காசிய நாடுகளில் தேயிலை தோட்டங்களில் தொழில் புரியும் தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகள் அடங்கிய முறைபாட்டை, ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்வைக்க உள்ளதாக காணி உரிமைக்கான செயற்பாட்டாளர் எஸ்.ரி. கணேசலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேச தேயிலை தினமான நேற்று முன்தினம் (21) ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "இன்றைய சூழலில் சர்வதேச தேயிலை தினம் கொண்டாட முடியாத நிலையே காணப்படுகின்றது.

"இலங்கை, இந்தியா, பங்களாதேஸ் உள்ளிட்ட தெற்காசி நாடுகளில், தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தோட்ட தொழிலாளர்கள் ஒரே மாதிரியான பிரச்சினைகளுக்கே முகங்கொடுத்து வருகின்றனர்.

"அந்நியச் செலவாணியைத் தேடித்தரும் இவர்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இவர்களுக்குரிய உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இது குறித்து அந்தந்த நாடுகளின் தொழிற்சங்கங்கள், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகள் ஆகியன இணைந்து 'சூம்' தொழில்நுட்பத்தின் மூலம் கலந்துரையாடி, ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

"மலையகத் தொழிலாளர்களுக்கு இன்றும் வீட்டுரிமை கிடையாது; காணியுரிமை கிடையாது. இந்நிலையில், நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை காரணமாக பொருளாதார ரீதியில் அவர்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்றார்.



## சரியப் பார்த்த சவர்க்கார லொறி

ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பிலிருந்து ஹட்டனுக்கு சவர்க்காரங்களை ஏற்றிச் சென்ற லொறியொன்று, நேற்று முன்தினம் (21) இரவு விபத்துக்குள்ளானது.

ஹட்டன்- கொழும்பு வீதியின் செனன் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி, வீதியை விட்டு விலகி, மண்திட்டு ஒன்றில் மோதியுள்ளது. மண்மேட்டில் மோதியிருக்காவிட்டால், லொறி பள்ளத்தில் பாய்ந்திருக்கும் என லொறியின் சாரதி தெரிவித்துள்ளார்.

## ஹட்டனில் இரத்ததானம்



ரஞ்சித் ராஜபக்ஷ

இலங்கை மின்சார சபையின் ஹட்டன் மின் நுகர்வோர் சேவை நிலையத்தின் நலன்புரி சங்கத்தால் 5ஆவது தடவையாகவும் இரத்த தான முகாம் நடத்தப்பட்டது.

கண்டி போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு தேவையான இரத்தத்தை வழங்குவதற்காக இந்த இரத்ததான முகாம் நேற்று முன்தினம் (21) நடத்தப்பட்டது. அதில், மின்சார சபை ஊழியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் தமது இரத்தத்தை தானம் செய்தனர்.

# பத்து நாள்களுக்கு மௌனம் காத்து ஒத்துழைப்பதே அவசியம்

ஒரு கத்தியால் செய்யமுடியாத மாற்றத்தை, ஒரு பேனா செய்துவிடும். அதேபோல, புள்ளடியால் விட்ட தவறை, போராட்டம் திருத்திவிடும். மக்கள் போராட்டத்துக்கு இவ்வளவு சக்தியிருக்கிறதா என்பதை மஹிந்த ராஜபக்ஷ, மே9 ஆம் திகதியன்று பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யும் கடிதத்தில் கையொப்பமிடும்போது உணர்ந்திருப்பார்.

போராட்டத்தின் பலத்தைக் கணக்கிலெடுக்காது விடுவோருக்கு, பிரதமரின் இராஜினாமா ஒரு படிப்பினையாகும். நமது நாட்டைப் பொறுத்தவரையில், எங்கு பார்த்தாலும் உரிமைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால், போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு, பல்வேறு அசௌகரியங்களுக்குப் பலரும் முகங்கொடுக்கின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டால், அமரர் ஊர்திகூட, இடுகாட்டை நோக்கிப் பயணிக்கமுடியாத அவல நிலைமையொன்று, கொழும்பில் ஏற்பட்டிருந்தது. அந்தளவுக்கு நெருக்கடிக்கு மேல் நெருக்கடியை சுமக்கவேண்டி இருக்கின்றது. ஆனால், போராட்டங்கள் ஓயவில்லை.

கொழும்பில் சில முக்கியமான இடங்களை மையப்படுத்தி, பேரணிகள், போராட்டங்கள், வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுமாயின், அப்பிரதேசத்தின் ஊடாக போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்பட்டு, வாகனங்கள் மாற்று வீதிகளில் திருப்பிவிடப்படும்.

இன்னும் சில இடங்களில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது, நோயாளர் காவு வண்டிக்கு (அம்புலன்ஸ்) இடமளிக்கப்படுவதில்லை; இது தவறானது. இதேபோல, நோயாளர் காவு வண்டிக்கு இடமளிக்கும் போது, அதனோடு புகுந்து செல்லவும் சில சாரதிகள் முயற்சிப்பர்; அதுவும் தவறாகும்.

நாடளாவிய ரீதியில் உரிமைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல, கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகளும் இன்று (23) ஆரம்பமாகின்றன. தங்களுடைய தடையை பேனாவைக் கொண்டு தாண்டவிருக்கின்றனர். அவர்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில், எதிர்வரும் 10 நாள்களுக்கு எவ்விதமான போராட்டங்களையும் முன்னெடுக்காமல் விடுவதே சிறந்த பண்பாகும்.

கொரோனாவுக்கு பின்னர், ஒவ்வொரு மாணவனும் கல்வியில் செலுத்தும் கவனம் சிதறியிருக்கிறது. எரிபொருள், விலையேற்றம், மேலதிக வகுப்புகளுக்கு செல்வதில் முகங்கொடுத்திருந்த பொருளாதார பிரச்சினை, மின்வெட்டு இப்படி ஒவ்வொன்றும் சா/த பரீட்சார்த்திகளை ஏதோவொரு வகையில் பாதித்திருக்கும்.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் மனதளவில் சோர்வடைந்து விடாதவகையில் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். பரீட்சைக்குச் சுணங்கிவிட்டால் ஏற்படும் பதற்றத்தைத் தவிர்ப்பதற்கு, முறையான போக்குவரத்து சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிரதான நகரங்களை விடவும், பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து பரீட்சை எழுதுவதற்காக, நகரங்களில் உள்ள பரீட்சை நிலையங்களுக்கு வரும் பரீட்சார்த்திகளுக்கு, உரிய போக்குவரத்து சேவைகளை பெற்றுக்கொடுக்கவேண்டும். அதனூடாகவே அவர்களால், வாழ்வில் அடுத்தடுத்த கட்டத்துக்குச் செல்லமுடியும்.

ஆகையால், எதிர்வரும் பத்து நாள்களுக்கு வழியை மறித்து, பரீட்சார்த்திகளின் வாழ்வில் விளையாடி விடாது, வழிவிட்டு, வழி சமைத்துவிடவேண்டும் என்பதே எமது தாழ்மையான கருத்தாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உயரிய நோக்கத்துடன் சிந்தையை வைத்துக் கொண்டால், எமக்கான தேவைகள் தானாகவே வந்துசேர்ந்துவிடும். பேராசை, காழ்ப்பு, வஞ்சகம் இவைகளைக் களைந்தாலே போதும்! தூய்மையான சலனங்கள் அற்ற பிரார்த்தனைகளில் நம்பிக்கைகளை ஆழமாகப் பதித்திடுக!

தூய்மையான சிந்தை உள்ளவர்கள், அடுத்தவரின் துயரங்களைப் புரிந்துகொள்கின்றார்கள். ஆனால், துர்சிந்தனையாளர்கள் விழிப்பு நிலையில்கூட கெட்ட கனவுகளையே காண்கின்றார்கள். இத்தகைய துஷ்டர்கள், தீமைகள் என்றும் அழியாமல் இருக்க வேண்டும் என்றே விரும்புவார்கள். ஏனெனில், இவர்களுக்கு நீதி, நேர்மை, விசுவாசம் எல்லாமே, கசப்பானவையாகவே தெரியும். எத்தனை தடவைகள் சிறைக்குச் சென்று வந்தாலும், இத்தகையவர்கள் திருந்துவது கிடையாது. அந்த அளவுக்கு அநியாயங்களுக்கு அடிமையாகிப் போயிருப்பார்கள்.

உண்மைகளைக் கண்டுகொள்ளாவிடின், மானுடம் மயக்கத்திலேயே இருந்துவிடும். கண்ணாடி மூலம் இதயத்தைப் பார்க்க முடியாது. தூய நெஞ்சத்தின் ஊடாகவே எம்மை நாம் தரிசிக்க முடியும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# உயிர் பிழைக்குமா இலங்கை?



என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

கடந்த வாரம் இலங்கை சந்தித்த மிகப்பெரும் நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடுதான். எரிபொருள் தட்டுப்பாட்டை, தனியார் வாகனம் வைத்திருப்பவர்களுக்கு ஏற்பட்ட வசதிக்குறைவுதான் என்று, குறுகிய பார்வையில் அணுகிவிடக்கூடாது.

எரிபொருள் தட்டுப்பாடு என்பது, மிகப்பெரிய அடிப்படை வசதி சார்ந்த ஒரு பிரச்சினை. மனித சமூகத்தின் வளர்ச்சியில், விரைவுப் பிரயாணம் என்பது மிக முக்கிய அம்சம். மனிதனானவன் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு விரைவில் பயணிக்க முடியும் என்பது, மனித சமூகத்தின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் அடிப்படையாக உருவாகிவிட்டது.

இன்றைய காலகட்டத்தில், நகரமயமாக்கலின் பின்னர் பயணம் என்பது, எமது வாழ்வியலின் அடிப்படை. அது ஸ்தம்பிக்கும் போது, எல்லாமே ஸ்தம்பித்து விடுகிறது. வேலைக்கு போக முடியாது; பாடசாலைக்குப் போக முடியாது; அவசரத்துக்கு வைத்தியசாலைக்குப் போவது கூட, சிம்மசொப்பனமானதொரு சவாலாக மாறிவிட்டது.

பலருக்கு வேலையே, போக்குவரத்து சேவையை வழங்குவதுதான். அவர்களுக்கு வேலையே இல்லாது போய்விட்டது. பொருட்கள் ஓரிடத்திலிருந்து, இன்னோர் இடத்துக்குக் கொண்டு செல்லப்படுவதையும் எரிபொருள் தட்டுப்பாடு பாதிக்கிறது. இதனால் உணவு, மருந்து உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது.

பொருட்களை வாங்கக் காசில்லை என்று ஏங்கும் ஒரு பகுதி மக்கள், காசிருந்தாலும் வாங்க பொருள் இல்லையென்று தவிக்கும் இன்னொரு பகுதி மக்கள் என, இல்லாமையின் கொடுமையை இலங்கையர்கள் நித்தம் நித்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கத்துடன், புதிய பிரதமராக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, உலக நாடுகளிடமும் சர்வதேச அமைப்புகளிடமும் உதவி கோரும் நடவடிக்கைகளை துரித கதியில் முன்னெடுத்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்தியா மீது, இலங்கையருக்கு ஆயிரம் விமர்சனங்கள், கசப்புணர்வுகள், கோபதாபங்கள் இருந்தாலும், ஒரு நல்ல சகோதரனைப் போல, இந்தியா நடந்து கொண்டிருக்கிறது என்றால் அது மிகையல்ல. 'அர்த்த சாஸ்திரம்' படைத்த கௌடில்யன், 'நோய், துரதிர்ஷ்டம், பஞ்சம், படையெடுப்பு போன்றவற்றின் போது உனக்கு உதவி செய்பவனே, உன் உண்மையான சகோதரன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தச் சாணக்கிய நீதிக்கேற்ப இந்தியா, ஒரு நல்ல சகோதரனாக இலங்கைக்கு, இந்தத் துரதிர்ஷ்ட சந்தர்ப்பத்தில் கைகொடுத்திருக்கிறது. தற்போது தமிழ்நாடு, இரண்டு பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய அத்தியாவசிய உதவிப் பொருட்களை இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கிறது. பெரும்பான்மையின இலங்கையர்களால், இதுவரை காலமும் வெறுப்போடு பார்க்கப்பட்ட தமிழகம், இலங்கை வாழ் தமிழர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து, தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கைக்கும் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்திருக்கிறது.

இலங்கை மீதான இந்தியாவின் அக்கறைக்கு, இந்திய நலனே காரணம் எனச் சிலர் இன்றும் கற்பிதங்களை முன்வைக்கலாம். அதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்தியாவின் சர்வதேசக் கொள்கை மீது, குறிப்பாக அயல்நாடுகள் மீதான கொள்கை மீது விமர்சனங்கள் உண்டு.

சர்வதேச அரசியல் என்பது, எப்போதும் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டது. அரசியலைப் பொறுத்தவரையில், பொதுநலம் என்பது கூட, சுயநலத்தின் பாற்பட்டதே! ஆனால், சுயநலத்தை அடைந்துகொள்வதற்குப் பல வழிகள் உள்ள போது, பொதுநலன்மிக்க வழியைத் தேர்ந்தெடுப்பது என்பது பாராட்டுக்குரியது.

இலங்கையின் நண்பன் எனச் சிலாகித்துக் கொண்டிருந்த, வட்டிக்கு கடன் தரும் நாடு(கள்), இன்று பெரியளவில் உதவிகள் செய்யாது இருக்கும் நிலையில், இந்தியா, இலங்கைக்கு செய்வது காலத்தால் செய்த உதவி ஆகும். ஆதலில், அது ஞாலத்தில் சாலப் பெரியது.

இந்தியாவின் உதவி இல்லாவிட்டால், இன்று எரிபொருள் ஒரு துளியும் கிடைக்காத, அதனால் பாதி நாளுக்கும் மேல் மின்சாரம் இல்லாத, அதனால் பொருட்தட்டுப்பாடு நிறைந்த, பஞ்ச நிலையின் உச்சத்தைத் தொடும் நாடாக, இலங்கை மாறியிருக்கும். நிற்க!

ரணில், மாயக்காரனோ மந்திரவாதியோ அல்ல. பழுத்த அரசியல் - நிர்வாக அனுபவம், நிறைந்த அரசியல் - பொருளியல் புரிதல், சர்வதேச நாடுகளுடனான உயர்ந்த உறவு ஆகியவற்றைக் கொண்ட ஓர் அரசியல்வாதி.

உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் 'இலங்கை' எனும் நோயாளிக்கு, இன்று, உயிர் பிழைப்பு வைத்தியம் செய்ய வந்திருக்கும் வைத்தியரே ரணில்! இலங்கையை ராஜபக்ஷ எனும் வைரஸ் பீடித்திருக்கிறது. பல வருடங்களாகப் பீடித்திருந்த அந்த வைரஸ் முழுமையாக நீங்கினால் தான், இலங்கைக்கு மீட்சி.

இலங்கையை மீட்பதற்கு அந்த வைரஸ் நீங்க வேண்டும்; அதுவரை உயிர் பிழைப்பு வைத்தியம் கூட செய்யமாட்டோம் என, தம்மை கொள்கைவாதிகளாகக் காட்டிக்கொள்ளும் அரசியல்வாதிகள், வாய்ப்பிழைப்பு அரசியலை நடந்திக் கொண்டிருக்கும் போது, "கோட்டா போகாவிட்டால், நாம் அவசர நிலையில் கூட ஆட்சியைப் பொறுப்பேற்ற மாட்டோம்" என 'கொள்கைவாத' எதிர்க்கட்சிகள் கைவரித்த போது, உயிருக்காகப் போராடும் இலங்கையைக் காப்பாற்றுவதற்கு ரணில் முன்வந்திருக்கிறார்.

ரணில் மீது 1001 விமர்சனங்கள் இருக்கின்றன. ரணில் அரசியலிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என இன்றும் நம்புகிறேன். ஆனால், இன்றைய நிலைக்கு ரணில் போன்றதொரு 'தந்திரி' அவசியம். இது, அரசியல் செய்வதற்கான நேரமில்லை.

உங்கள் வீட்டில், பாலுக்கு அழும் குழந்தை, மருந்து கிடைக்காது தவிக்கும் நோயாளி, போதிய வருமானம் ஈட்ட முடியாது, வேளை உணவுக்கு என்ன செய்வது என ஸ்தம்பித்து நிற்கும் குடும்ப உறுப்பினர்கள், மின்வெட்டால் தவிக்கும் குடும்பம் இருந்தால், அப்போது உங்களுக்கு 'கொள்கைவாத' வாய்ப்பிழைப்பு அரசியலை விட, இன்றைய நிலையில் உயிர்பிழைப்பை முன்னுரிமைப்படுத்த வேண்டியதன் அவசியம் புரியலாம். அது புரியாவிட்டால், நீங்கள் சலுகைபெற்ற (privileged) சமூக நிலையிலிருந்து வருகிறீர்கள் என்று அர்த்தம்; அல்லாவிட்டால், 'நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்ற கண்மூடித்தனமான பிடிவாதக்காரர் என்று அர்த்தம்.

ராஜபக்ஷர்கள் போக வேண்டும் என்பதில் துளியும் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் ராஜபக்ஷர்களை அனுப்ப அடுத்த தேர்தலுண்டு. அந்தத் தேர்தல் வரை, இலங்கையர்கள் உயிர்பிழைத்திருக்க வேண்டாமா?

இங்கு, "ராஜபக்ஷர்கள் போனால்தான், நாம் ஆட்சியைப் பிடிப்போம்" என்று வியாக்கியானம் பேசும் எவரும், சட்ட ரீதியாக ராஜபக்ஷர்களை போகவைப்பதை தாம், எப்படிச் செய்யப்போகிறோம் என்று சொல்லவேயில்லை. ஏனென்றால், பாராளுமன்றத்தில் இன்று கிட்டத்தட்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட ராஜபக்ஷ தரப்பை, சட்ட ரீதியாக வெளியேற்றுவது என்பது, அடுத்த தேர்தல் வரை சாத்தியமில்லை என்பது அவர்களுக்கும் தெரியும்.

அப்படியானால் சட்டத்துக்குப் புறம்பான புரட்சி மூலம், அடித்துக்கலைக்கலாமே என்று சிலர் யோசிக்கலாம். நீங்கள் நல்லது செய்வதாக எண்ணிக்கொண்டு, காடையர் ஆட்சிக்கு ஆதரவு தந்தால், நாளை அந்தக் காடையர் ஆட்சியே சாதாரணமாகிவிட முடியும். உங்களுடைய தேவைக்காக சட்டத்தை மீறுவதை நீங்கள் நியாயப்படுத்தினால், நாளை இன்னொருவர் அவருடைய தேவைக்காக சட்டத்தை மீறுவதை அவர் நியாயப்படுத்துவார். சட்டத்தின் ஆட்சி என்பது கேலிக்கூத்தாகிவிடும்.

ராஜபக்ஷர்களைக் கலைக்க வேண்டுமானால், அடுத்த தேர்தலில் இலங்கையர்கள் ஒன்றிணைந்து, ராஜபக்ஷர்களை நிராகரிக்க வேண்டும். அதுதான் சாத்தியபபாடனது; அதுதான் ஜனநாயகம். அதுவரை இலங்கையர்கள் பிழைக்க வேண்டும். இலங்கையர்களை உயிர்பிழைத்து இருக்க வைப்பதற்கு, பிரதமர் ரணில் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளுக்கான ஆதரவு, அனைவராலும் வழங்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சியின் கண்மூடித்தனமான நிலைப்பாட்டால், இன்று திறமையற்றதோர் அமைச்சரவையுடன் இயங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார். ஒருவேளை ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்தன உள்ளிட்டோர் மனம் மாறினால், தமது கட்சியை விட, இலங்கையின் பொருளாதார மீட்சியை முன்னிறுத்தினால் இலங்கையர்கள், அவர்களுக்கு நன்றிக் கடனுடையவர்களாவார்கள். அதனை அவர்கள் செய்வார்களா என்பதுதான், இன்றிருக்கும் முக்கிய கேள்வி.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிடம் பாராளுமன்ற பெரும்பான்மையுள்ள போது, தனியாளாக ஆட்சியை ஏற்றிருக்கும் ரணில், பல தர்மசங்கடங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். பிரதி சபாநாயகர் தெரிவில் நடந்தது அதுதான்!

ஆனால், ரணிலால் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் இலங்கையைப் பிழைக்க வைக்க முடியுமென்றால், அதுவே ரணிலின் அரசியல் பயணத்தின் மிகப் பெரிய சாதனையாக இருக்கும்.

வீராவேசப் பேச்சுகளால் இன்று இலங்கையைக் காப்பாற்ற முடியாது. அதுதான் உண்மை!

## கடிதங்கள்

### கல்முனை, கடற்கரை கண்ணகி அம்மன் கோவில் வீதியில் அவலநிலை



கல்முனை, கடற்கரை கண்ணகி அம்மன் கோவிலுக்குச் செல்லுகின்ற கோவில் வீதிச் சந்தியில் வீசப்படும் குப்பைகளால், அந்த இடத்தில் பெரும் சூழல் மாசடை ஏற்படுவதுடன், அயலில் வசிப்பவர்கள் உட்பட வீதியில் செல்வோரும் பெரும் ஆரோக்கிய குறைபாட்டுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். இந்த அவல நிலையைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றார்கள்.

குறித்த, கோவில் வீதியில் குப்பைகளை கொட்டும் விசமிகள், சுற்றாடலில் குடியிருக்கும் மக்களின் அசௌகரியங்களைப் பற்றியோ, இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்களைப் பற்றியோ எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் செயற்படுகின்றார்கள். முக்கியமாக, அவ்விடத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றியில் ஏற்படக்கூடிய தீஅபாயத்தைப் பற்றியும் எவ்வித அக்கறையுமில்லாமல், சுயநல விசமிகள் போல் நடந்து கொள்கின்றார்கள். இந்தச் சந்தியிலிருந்து மிகக் குறுகிய தூரத்தில் மசூதி ஒன்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சுற்றாடல் சீர்கேட்டுக்கு யார் பொறுப்பு....?

சம்பந்தப்பட்டவர்கள் இந்தச் சுற்றாடல் சீரழிவைப் போக்க, ஆக்கபூர்வமான நடவடிக்கையை விரைவில் எடுப்பார்கள் என பாதிக்கப்படும் மக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

த. சகாதேவராஜா

சவால்களுக்கு மத்தியிலும்

# SLT குழுமம் தேசத்துக்கு பெறுமதி சேர்ப்பு



SLT குழுமத்தின் தவிசாளர் றொஹான் பெர்னான்டோ



SLT குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன



SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க



மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென

ஸ்ரீலங்கா டெலிகொம் குழுமம் (SLT குரூப்), 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ரூ. 26 பில்லியன் வருமானத்தை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமதி %5.4 உயர்வானதாகும். முதல் காலாண்டில் குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 2.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. சவால்கள் நிறைந்த பொருளாதார சூழலிலும் குழுமத்தின் மீண்டெழுந்திறனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. புதுவருடத்தின் ஆரம்பத்திலும் டிஜிட்டல் மாற்றியமைப்புத் திட்டங்கள் தொடர்பில் குழுமம் கவனம் செலுத்தியிருந்ததுடன், பங்காளர்கள் மற்றும் தேசத்துக்கு பெறுமதி சேர்ப்பது மற்றும் செயன்முறைகளை தன்னியக்க மயப்படுத்துவது போன்றவற்றிலலும் கவனம் செலுத்தியிருந்தது.

SLT குழுமத்தின் EBITDA (வரிக்கு முன்னரான வருமதிகள், வரி, மதிப்பிறக்கம் மற்றும் ஒதுக்கங்கள்) பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.9% உயர்ந்து ரூ. 10.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. EBITDA எல்லைப் பெறுமதி இக்காலாண்டில் 41% இனால் அதிகரித்துள்ளது. காலாண்டில் குழுமத்தின் வரிக்கு முந்தைய இலாபம் (PBT) ரூ. 3.5 பில்லியனாக பதிவாகியிருந்தது.

குழுமத்தின் வருமானம் பிரதானமாக புரோட்பான்டினூடாக ஈட்டப்பட்டது. இதை சாதிப்பதில் தேசிய ஃபைபர்மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்படும் Fibre விரிவாக்கல் திட்டத்தினூடாகவும், 4G/LTE வலையமைப்புகளின் விரிவாக்கங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் போன்றவற்றினூடாகவும் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஃபைபர் மயமாக்கலின் மீதான முதலீடுகள் மற்றும் ஃபைபர் தீர்வுகளை சந்தைப்படுத்துவது துரிதப்படுத்தப்பட்டிருந்தமை போன்றன முதல் காலாண்டு பெறுமதிகளை எய்துவதில் அதிகளவு பங்களிப்பை வழங்கியிருந்தன. அதிகளவு நுகர்வோர் கேள்வியும் நிலவியிருந்தது. மேலும் ஃபைபர் விரிவாக்கத் திட்டத்தினூடாக, PEOTV வருமானத்திலும் அதிகரிப்பை குழுமம் அவதானித்திருந்தது. இக்காலப் பகுதியில் சேவை வழங்குநர் உள்ளக சேவைகளினூடாக வருமானமும் (Carrier Domestic Revenue) அதிகரித்திருந்தது.

SLT குழுமத்தின் தவிசாளர் றொஹான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு பெருமளவு சவால்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது, எவ்வாறாயினும், SLT-MOBITEL இன் ஒட்டுமொத்த பெறுபேறுகள் மீட்சியையும் உறுதித் தன்மையையும் வெளிப்படுத்தியிருந்தன. 2022 ஆம் ஆண்டில், சகல பங்காளர்களுக்கும் பெறுமதியை ஏற்படுத்திக் கொடுக்க நாம் எதிர்பார்ப்பதுடன், டிஜிட்டல் பாகுபாட்டை இல்லாமல் செய்து, தேசத்துக்கும் எமது மக்களுக்கும் ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். கடும் நிதிசார் ஒழுக்கம் என்பது எமது வெற்றிகரமான செயற்பாட்டில் முக்கிய காரணியாக அமைந்துள்ளது" என்றார்.

குழுமத்தின் தொழிற்பாட்டு பணப் பாய்ச்சல்கள் முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் %35.3 இனால் அதிகரித்து ரூ. 16.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. காலாண்டின் இறுதியின் குழுமம் பணம் மற்றும் பணத்துக்கு நிகரான சாதகமான பெறுமதிகளாக ரூ. 31.6 பில்லியனை பதிவு செய்திருந்தது. முதல் காலாண்டில் அரசாங்கத்துக்கு SLT குழுமத்தின் பங்களிப்பு ரூ. 4.2 பில்லியனாக காணப்பட்டது. நேரடி மற்றும் மறைமுக வரிகளினூடாக இந்தப் பங்களிப்பு எய்தப்பட்டிருந்தது.

குழுமத்தின் தாய் நிறுவனமான, ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT), வரிக்கு பிந்திய இலாபமாக முதல் காலாண்டில் ரூ. 4.1 பில்லியனை பதிவு செய்திருந்தது. காலாண்டில் வருமானம் ரூ. 15.9 பில்லியனாக பதிவாகியிருந்தது. EBITDA மற்றும் தொழிற்பாட்டு இலாபங்கள் ரூ. 6.3 பில்லியன் மற்றும் ரூ. 1.1 பில்லியனாக பதிவாகியிருந்தன.

குழுமத்தின் மொபைல் சேவைகள் பிரிவான மொபிடெல் (பிரைவட்) லிமிடெட், 2022 இன் முதல் காலாண்டில் ரூ. 11.6 பில்லியனை வருமானமாக பதிவு செய்திருந்தது. EBITDA மற்றும் தொழிற்பாட்டு இலாப எல்லைப் பெறுமதிகள் %38.9 மற்றும் %19.3 ஆக காணப்பட்டன. நிறுவனத்தின் வருமானத்தில் அந்நியச் செலாவணி இழப்புகள் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், காலாண்டில் ரூ. 0.8 பில்லியன் தேறிய நட்டம் பதிவாகியிருந்தது.

கொமர்ஷல் வங்கி

# சிக்கலான காலாண்டை கடந்தது



கொமர்ஷல் வங்கி 2022இன் முதலாவது காலாண்டு முடிவில் சமநிலையான நிதிச் செயற்பாட்டைத் தாக்கல் செய்துள்ளது. மிகக் கூர்மையான நாணய மதிப்பிறக்கம் பிரதான செயற்பாட்டு சுட்டெண்களை சாதகமாகவும் பாதகமாகவும் பாதித்துள்ள வேளையில் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட தனியார் கொமர்ஷல் வங்கி, அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்களை உள்ளடக்கியதே கொமர்ஷல் வங்கிக் குழுமம். 2022 மார்ச் 31இல் முடிவடைந்த மேற்குறிப்பிட்ட காலாண்டில் இந்தக் குழுமத்தின் மொத்த வருமானம் 54.573 பில்லியன் ரூபாய்களாகப் பதிவாகி உள்ளது. மொத்த செயற்பாட்டு வருமானம் ரூ. 34.244 பில்லியன்களாகும். தேறிய செயற்பாட்டு வருமானம் ரூ. 28.284 பில்லியன்களாகும். இது முறையே 33.41 வீதம், 41.74 வீதம் மற்றும் 66.33 வீதம் அதிகரிப்பாகும்.

2022 மார்ச்சில் அவதானிக்கப்பட்ட முன்னொருபோதும் இல்லாத நாணய மதிப்பிறக்க நிலையில் வெளிநாட்டு நாணய ஆதிக்க சொத்து வரிசையில் வருட வட்டி அதிகரிப்பு குறிப்பிட்ட மூன்று மாத காலத்தில் 19.41 வீதமாக அதிகரித்து ரூ. 37.847 பில்லியன்களாக உள்ளது. வட்டி செலவினங்கள் கூட வருடத்துக்கு வருட வைப்புக்களின் வளர்ச்சி அதிகரிப்பு காரணமாகவும், துல்லியமான நாணய மதிப்பிறக்கம் காரணமாக வெளிநாட்டு நாணயக் கடன்களின் அதிகரிப்பு காரணமாகவும், வைப்புக்கள் மீதான வட்டிச் செலவினங்களில் கணிசமான அதிகரிப்பு காரணமாகவும் 17.30 வீதமாக அதிகரித்து ரூ. 19.024 பில்லியன்களாக உள்ளது. இதன் காரணமாக குழுமத்தின் தேறிய வட்டி வருமானம் முதல் காலாண்டில் ரூ. 18.823 பில்லியன்களாக உள்ளது. இது 21.62 வீத வளர்ச்சியாகும்.

இந்தக் காலாண்டு மீளாய்வு பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கி தலைவர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன, "இலங்கையில் வர்த்தகத் துறைக்கு இது வழமைக்கு மாறான காலப் பகுதியாகும். குறிப்பாக வங்கிகளுக்கு. இந்தப் பிரிவில் மிக விரிவான விதிவிலக்கான புத்திசாலித் தனம் அவசியமாகின்றது. முதல் காலாண்டின் எமது பெறுபேறுகள் வங்கியில் காணப்படும் எமது முகாமைத்துவ ஆற்றலின் ஆழத்தைப் பிரதிபலிக்கின்றன" என்று கூறினார்.

வங்கியில் புதிதாக நியமனம் பெற்ற பிரதான நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சனத் மானதுங்க, "இலங்கை ரூபாயின் முன்னொருபோதும் இல்லாத நாணய மதிப்பிறக்கம் வருமானத்தையும் இலாபத்தையும் அத்தோடு ஐந்தொகை சுட்டெண்களையும் பாதிக்கக் கூடியவை. செயற்பாடுகளில் இது திரிபு படுத்தும் விளைவுகளை ஏற்படுத்தலாம். இருந்தபோதும் நாம் திடமான பெறுபேறுகளை சமர்ப்பித்துள்ளோம். வெளிக்காரணங்களில் ஏற்படும் துரித மாற்றங்களால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு தொடர்ச்சியான துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்" என்று கூறினார்.

குழுமத்தின் தேறிய செயற்பாட்டு வருமானம் 2021இன் முதல் காலாண்டில் ரூ. 17.005 பில்லியன்களாக இருந்து, இந்தக் காலாண்டில் ரூ. 28.284 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. இது 66.33 வீத வளர்ச்சியாகும். இந்த மூன்று மாத காலத்தில் செயற்பாட்டு செலவினம் ரூ. 8.721 பில்லியன்களாகும். இது தேறிய செயற்பாட்டு வருமானத்தில் எட்டப்பட்ட 66.33 வீத வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் 23.66 வீத குறைவான அதிகரிப்பாகும். நிதிச் சேவைகள் மீதான வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபமாக குழுமம் ரூ. 19.563 பில்லியன்களைப் பதிவு செய்துள்ளது. இது அதி உயர் மட்ட 96.56 வீத அதிகரிப்பாகும்.

குறிப்பிட்ட காலாண்டுக்கான (பெறுமதி சேர்) VAT வரி இரட்டிப்பை விட அதிகமாகி ரூ. 3.155 பில்லியன்களாக உள்ளது. இலாபங்கள் மீதான VAT அதிகரிப்பு மற்றும் 2022 ஜனவரி 1 முதல் 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக VAT அதிகரிப்பு என்பன காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக குழுமத்தின் வரிக்கு முந்திய இலாபம் இந்த மூன்று மாத காலத்தில் 95.21 வீதமாக அதிகரித்து ரூ. 16.406 பில்லியன்களாக உள்ளது. குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபமாக குறிப்பிட்ட காலப்பகுதியில் ரூ. 11.775 பில்லியன்களாகப் பதிவாகி உள்ளது. இது 73.23 வீத அதிகரிப்பாகும்.

நளினி உள்ளிட்ட 6 பேர்

ஊட்டி

# விடுதலை குறித்து ஆலோசனை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவந்த பேரறிவாளன், மே.18ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். அவரது விடுதலையைத் தொடர்ந்து நளினி உள்ளிட்ட மற்றைய ஆறு பேர் விடுதலை தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தினார்.



சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, தற்கொலைக் குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் ஆகியோருக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. ரவிச்சந்திரன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், தன்னை விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் சார்பில் 2016 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில், மேல்முறையீடு செய்யப்பட்டது. இவ்வழக்கில் கைதாகி 31 ஆண்டுகள் சிறையில் வாடிய பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் தொடர்ச்சியாக, முருகன், நளினி, ரவிச்சந்திரன், ரொபர்ட் பயாஸ், சாந்தன், ஜெயக்குமார் ஆகிய ஆறு பேருக்கும் விடுதலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. பேரறிவாளனுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றவர்களுக்கும் பொருந்தும் என தமிழக அரசின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மீதமுள்ள ஆறு பேர் விடுதலை குறித்து சட்ட வல்லுநர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (22) ஆலோசனை மேற்கொண்டார். உதகையில் இருந்து காணொளி வாயிலாக, மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

உத்தரகன்னடா


# அரியவகை நண்டு பிடிபட்டது

உத்தரகன்னடா மாவட்டம் கார்வார் அருகே மஜாலி கடற்கரை அமைந்துள்ளது.

கோவா-கர்நாடக எல்லையில் அமைந்துள்ள கார்வார் மஜாலி கடற்கரையில், அரியவகை நண்டு பிடிபட்டுள்ளது.

மீனவர் வலையில் சிக்கிய அந்த நண்டின், கண்கள் இரண்டும் வெளியே நீண்டு இருக்கும். இவ்வாறான நண்டுகள், ஹவாய் தீவு, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் தெற்காசிய நாடுகளில் அதிகளவு காணப்படுகிறது.

'சூடோ பொத் தாலமஸ் விஜில்' என்ற விஞ்ஞானப் பெயரைக் கொண்ட அந்த நண்டை, கடல்சார் அறிவியல் மையத்தின் பேராசிரியர் டொக்டர் சிவக்குமார் ஆய்வு செய்து வருகிறார்.



புதுடெல்லி

# ஆண்களில் ஒரு பங்கினர் அசைவம் சாப்பிட்டதே இல்லை



இந்தியாவில், அசைவ உணவை எடுத்துக் கொள்ளும் ஆண்களின் எண்ணிக்கை கடந்த ஆறு வருடங்களில் கணிசமாக உயர்ந்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தினமும் அசைவம் சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை குறைவு தான். வாரத்தில் ஒரு நாள் மட்டும் பலர் அசைவம் சாப்பிடுவார்கள்.

தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு தகவல்படி, 15 வயது முதல் 49 வயது வரை உள்ள ஆண்களில் ஒரு பங்கினர் அசைவத்தை சாப்பிட்டதே இல்லை என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஜூன் 17, 2019 முதல் ஏப்ரல் 30, 2021க்கு இடைப்பட்ட காலத்தில் இரண்டு கட்டங்களாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மீன், கோழி இறைச்சி, இறைச்சி ஆகியவை அசைவ உணவுகளாக ஆய்வுப் பட்டியலில் இருந்தன.

2019-2021 காலகட்டத்தில், 15 வயது முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 29.4 சதவீதம் பேர் அசைவம் உட்கொண்டதில்லை என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில், 15 முதல் 49 வயதுக்குட்பட்டவர்களில், மொத்தம் 83.4 சதவீத ஆண்களும், 70.6 சதவீத பெண்களும், அசைவ உணவுகளை தினமும் அல்லது வாரந்தோறும் அல்லது எப்போதாவது சாப்பிட்டு வருவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

சென்னை

# இதயத்தில் இருந்து இரத்தக் கண்ணீர் வடிகிறது



"ராஜீவ் படுகொலை செய்யப்பட்டபோது எங்களது கண்ணீர் ஆறாய் ஓடியது. ஆனால், அந்தக் கொலையாளிகளின் விடுதலையை தற்போது, திருவிழாவாகக் கொண்டாடும்போது எங்கள் இதயத்தில் இருந்து இரத்தக் கண்ணீர் வடிகிறது" என தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 31 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே, கே.எஸ்.அழகிரி, மேற்கண்டவாறு தெரிவித்தார். "குற்றவாளியை கடவுளாக கருத முடியாது. குற்றம் செய்தவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும்" என்றும் கூறினார்.

வேலூர்

# முருகனின் உண்ணாவிரதம் வாபஸ்



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள 'முருகன்' என்ற ஸ்ரீகரன், வேலூர் ஆண்கள் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதே வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள முருகனின் மனைவி நளினி தற்போது பரோலில் விடுவிக்கப்பட்டு காட்பாடி அடுத்த பிரம்மபுரத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியுள்ளார். முருகன் பரோல் கோரி உண்ணாவிரதம் இருந்தார்.

வழக்கறிஞர் புகழேந்தி செய்தியாளர்களிடம் பேசும்போது, நளினியை சந்திப்பதற்கு முன்னதாக முருகனை மத்திய சிறையில் சந்தித்தேன். 6 நாள் பரோல் விடுப்பு கேட்டு முருகன் கடந்த 19 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வந்தார். சிறைத்துறை அதிகாரிகள் 6 நாள் பரோல் விடுப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவாதம் அளித்ததை தொடர்ந்து அவர் உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளார் என்றார்.

ஜெய்ப்பூர்

# பாக். பெண் உளவாளிக்கு தகவல் அளித்த வீரர் கைது



ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள இராணுவப் பிரிவில் கடமையாற்றிவரும் இராணுவ வீரர், பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் உளவாளிக்கு ஃபேஸ்புக், வாட்ஸ்-அப் மூலம், இராணுவ இரகசிய தகவல்களை பரிமாறியுள்ளார்.

கடந்த சில நாள்களாக கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த 18 ஆம் திகதி அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 3 ஆண்டுகளுக்கு முன்புதான் இவர் இராணுவத்தில் சேர்ந்துள்ளார்.

கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த இராணுவ செவிலியர் சேவை ஊழியர் என்ற பெயரில் அந்த பாகிஸ்தான் பெண் உளவாளி இவரிடம் அறிமுகமாகி பழகி வந்துள்ளார்.

அந்தப் பெண்ணிடமிருந்து இந்த இராணுவ வீரருக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு அலைபேசிக்கு அழைப்பு வந்துள்ளது. புதுடெல்லியில் சந்தித்துப் பேசலாம் என்பதுடன், காதலையும் வெளிப்படுத்திய அந்தப் பெண், திருமணம் செய்துகொள்ள விருப்பமாக இருப்பதாகக் கூறியும் முக்கிய தகவல்களை பெற்றுள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஆபிரிக்கா

# குரங்கு அம்மையால் மக்கள் பேரச்சம்

ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவி வரும் குரங்கு அம்மை நோய்த் தொற்று, சின்னம்மை போல இருப்பினும் பாதிப்பு குறைவாகவே உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய நோயாகக் கருதப்படும் இது, ஆரம்பத்தில் ஆபிரிக்காவில் மாத்திரமே பரவி வந்த நிலையில், தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் அதிகளவில் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்து அவசர ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டிய உலக சுகாதார ஸ்தாபனம் "அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 12 நாடுகளில் 80 பேருக்கு இத்தொற்றுப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருக்கிறது" எனத் தெரிவித்துள்ளது.

எனினும் இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் இத்தொற்றானது தற்போது வேகமாகப் பரவி வருவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





பிரித்தானியா

## மின்சாரக் கார்களாக வரும் பழைய கார்கள்

பிரித்தானியாவில் உள்ள 'லண்டன் எலெக்ட்ரிக் கார்ஸ்' என்ற நிறுவனம் பழைமையான கார்களை மின்சாரக் கார்களாக மாற்றி வரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

அந்தவகையில், குறித்த நிறுவனமானது பெட்ரோல் அல்லது டீசல் இயந்திரங்களை அகற்றிவிட்டு, அவற்றுக்கு பதிலாக நிஸான் லீஃப் அல்லது டெஸ்லாவின் மின்சாரத்தில் இயங்கும் இயந்திரங்களைப் பொருத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் குறித்த கார்கள் மின்சாரக் கார்களாக மாற்றப்படுவதாகவும் தற்போது புழக்கத்தில் உள்ள கார்களைப் பயன்படுத்துபவர்களும் சைலன்சரில் புகை வெளியேற்றத்தை நிறுத்தவும், காரின் செயற்றிறனை அதிகரிக்கும் நோக்கிலும் அவற்றை மின்சாரக் கார்களாக மாற்றம் செய்யக் கோரி வருவதாகவும் அந்நிறுவனத்தின் உரிமையாளர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா

## அவுஸ்திரேலிய பிரதமர் தேர்தல்

### அந்தோனி அல்பானீஸ் வெற்றி



அவுஸ்திரேலிய பிரதமரைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் (21) நடைபெற்றது.

இதில் லிபரல் கட்சி தலைவர் ஸ்கொட் மாரிசன் மற்றும் தொழில் கட்சி தலைவர் அந்தோனி ஆல்பனீஸ் இடையே கடும் போட்டி நிலவியது.

அவுஸ்திரேலியாவில் ஆட்சியைக் கைப்பற்ற மொத்தமுள்ள 151 உறுப்பினர் இடங்களில் 76 உறுப்பினர் இடங்கள் அவசியம் என்ற நிலையில், இதுவரை நடைபெற்று முடிந்துள்ள வாக்கு எண்ணிக்கையில் ஸ்கொட் மொரிசன் தலைமையிலான லிபரல் கட்சி கூட்டணி 52 உறுப்பினர் இடங்களையும், அந்தோனி அல்பானீஸ் தலைமையிலான தொழில் கட்சி 72 உறுப்பினர் இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

வெற்றி பெற 76 இடங்களே தேவை என்ற நிலையில் வாக்கு எண்ணிக்கையின் மத்தியிலேயே 72 உறுப்பினர் இடங்களை தொழில் கட்சி கைப்பற்றியதன் மூலம் அந்தோனி அல்பானீஸ் அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்க உள்ளமை உறுதியாகியுள்ளது.



பிரித்தானியா

## இரத்த மழை பெய்யும் அபாயம்

எதிர்வரும் நாள்களில் பிரித்தானியாவில் 'இரத்த மழை' என்னும் அபூர்வ நிகழ்வு நடைபெற இருப்பதாகவும், மேலும் சில பகுதிகளில் கடுமையான மழையும், பலத்த காற்றும் வீசக்கூடும் என்றும் அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இரத்த மழை என்பது, அதிக அளவில் சிவப்பு நிற தூசு அல்லது துகள்கள், மழை நீருடன் கலக்கும்போது உருவாவதாகும். ஆகையால் மழை பெய்யும்போது சிவப்பு நிறத்தில் நீர்த்துளிகள் விழுவதைக் காண முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரித்தானியா

## நாய் உணவுக்கு நல்ல சம்பளம்

பிரித்தானியாவில் நாய்களுக்கான உணவுகளைத் தயாரித்து வரும் நிறுவனம், தாம் தயாரிக்கும் உணவை ஐந்து நாள்கள் சாப்பிடும் நபருக்கு இலங்கை மதிப்பில் 23 இலட்சம் ரூபாய் சம்பளமாக வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலண்டனின் செயற்பட்டு வரும் நாய் உணவுகளைத் தயாரிக்கும் நிறுவனமே குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் மேலும் தெரிவிக்கையில், "நாம் தயாரிக்கும் உணவுப் பொருட்களில் இனிப்பு உருளை கிழங்குகள், பருப்புகள், பூசணிக்காய் போன்ற காய்களும், புளூபெர்ரி போன்ற கனிகளும் பட்டாணி போன்றவையும் கலந்திருக்கும்.

இவ் வேலைக்குத் தெரிவு செய்யப்படும் நபருக்கு என்று தனித்தகுதிகள் எதுவும் தேவையில்லை. எனினும், இவ் உணவை உட்கொண்டால் ஒவ்வாமை ஏற்படவில்லை என இந்த வேலைக்கு வருவோர் உறுதி செய்ய வேண்டும். ஒருவேளை ஒவ்வாமை ஏற்பட்டால் அதுபற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும். இதன்படி, 5 நாள்களுக்கு நாய் உணவை சாப்பிட வேண்டும். அதன்பின்னர், அவரது அனுபவம், உணவின் சுவை, ஆற்றல் அளவு, மனநிலை, வயிற்றில் உணவின் இயக்கம் உள்ளிட்ட விவரங்களை அளிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தான்

## மீண்டும் சர்ச்சையில் சிக்கிய இம்ரான்கான்

நவாஸ் ஷெரீப்பின் மகளான மரியம் நவாஸ் குறித்து, பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ள கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நம்பிக்கை இல்லா தீர்மானத்தில் ஆட்சியை இழந்த இம்ரான்கான், நாடு முழுவதும் தொடர் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களை நடத்தி வருவதுடன், அக் கூட்டங்களில் ஷபாஸ் ஷெரீப் தலைமையிலான புதிய அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்தும் வருகின்றார்.

இந்நிலையில், பஞ்சாப் மாகாணத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு பேசிய இம்ரான்கான், "முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மகளான மரியம் நவாஸ், தயவுசெய்து கவனமாக இருங்கள். நீங்கள் தொடர்ந்து எனது பெயரை உச்சரித்துக்கொண்டே இருப்பதால் உங்கள் கணவர் வருத்தப்படலாம்" எனக் கூறினார்.

இம்ரான்கானின் இச் சர்ச்சைக்குரிய பேச்சு அந்நாட்டு மக்களிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியானது இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

முதலாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில் இப்போட்டியானது முக்கியத்துவம் பெறுகையில் ஆடுகளமானது சுழற்பந்துவீச்சுக்கு சாதகமானதாக இருக்கும் எனத் தெரிகிறது.

போட்டியின் முதலிரண்டு நாள்களிலும் மழைக்கான வாய்ப்பு இருக்கும் என்ற போதிலும் இப்போட்டியில் முடிவு கிடைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவது போட்டியில் இலங்கையணியின் சுழற்பந்துவீச்சாளர்களான ரமேஷ் மெண்டிஸ், லசித் எம்புல்தெனிய ஆகியோர் சோபித்திருக்காத நிலையில், இலங்கையணியில் கசுன் ராஜிதவை பிரவீன் ஜெயவிக்கிரம பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுப்பக்கமாக பங்களாதேஷில் காயமடைந்த நயீம் ஹஸன், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோர் மொஷாடெக் ஹொஸைன், எபொடொட் ஹொஸைன் ஆகியோரால் பிரதியிடப்படுவர் எனத் தெரிகிறது.



## பரிஸ் ஸா ஜெர்மைனில் தொடரும் மப்பே

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டுக்குச் செல்வதைத் தவிர்த்து, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடன் மூன்றாண்டு ஒப்பந்த நீடிப்பொன்றை முன்களவீரரான கிலியான் மப்பே கைச்சாத்திட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தையடுத்து பரிஸ் ஸா ஜெர்மைனின் விளையாட்டும்ப் பணிப்பாளர் லியானார்டோ கழகத்தை விட்டு வெளியேறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. லியனார்டோவுடன் அவ்வளவாக நல்ல உறவை 23 வயதான மப்பே கொண்டிருக்கவில்லை.

இதேவேளை குறித்த ஒப்பந்தம் தொடர்பில் பரிஸ் ஸா ஜெர்மைனுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லா லிகா தெரிவித்துள்ளது.

இன்னொரு லீக் 1 கழகமான மொனாக்கோவிலிருந்து கடந்த 2017ஆம் ஆண்டு பரிஸ் ஸா ஜெர்மைனில் இணைந்த மப்பே அவர்களுக்காக 168 கோல்களைப் பெற்றுள்ளார்.



ஐ.பி.எல்:

## தகுதிகாண் போட்டியில் பெங்களூர்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) இவ்வாண்டு தொடரின் தகுதிகாண் போட்டிக்கு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் தகுதி பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றமையைத் தொடர்ந்தே தகுதிகாண் போட்டிக்கு றோயல் சலஞ்சர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட டெல்லி, டேனியல் சாம்ஸ், ஜஸ்பிரிட் பும்ரா (3), மாயங்க் மார்க்கண்டே, ரமன்டீப் சிங்கிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், றொவ்மன் பவல் 43 (34), றிஷப் பண்ட் 39 (33), அக்ஸர் பட்டேல் ஆட்டமிழக்காமல் 19 (10) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு, 160 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை, டிம் டேவிட்டின் 34 (11), இஷன் கிஷனின் 48 (35), டெவால்ட் பிரெவிஸின் 37 (33), திலக் வர்மாவின் 21 (17), ரமன்டீன் சிங்கின் ஆட்டமிழக்காத 13 (06) ஓட்டங்களோடு 19.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பும்ரா தெரிவானார்.



## சம்பியனான களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டு கழகம்

அஸ்ஹர் இப்றாஹிம்

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச மட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கெனடி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியே மெக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 23 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.